சுருக்கம்

சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை – புரட்சித்தலைவர் எம்ஜிஆர் சத்துணவுத் திட்டம் – பகுதி II திட்டம் 2008–09 ஆம் ஆண்டிற்கு பள்ளி சத்துணவு மையங்களில் உள்ள பொருட்களை அளக்க எடைக்கருவிகள் மற்றும் எடைத்தராசு வாங்கி வழங்க ரூ.50.00 இலட்சம் செலவினம் மேற்கொள்ள ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்படுகிறது

---

**சமூகநலம் மற்றும் சத்துணவு (சஉதி1) துறை**

அரசாணை (ப) எண்.98 நாள் 23–05–2008

படிக்கப்பட்டது :-

சமூகநல இயக்குநரின் கடித எண்.8088/2008/சஉதி நி1 நாள் 18.03.2008

------

**ஆணை:**

2008–09ம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின்கீழ் பள்ளி சத்துணவு மையங்களில் உள்ள உணவுப் பொருட்களை அளப்பதற்கு எடைக்கருவிகள் வாங்கி வழங்க ரூ.50.00 இலட்சம் நிதிநிலை குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் புரட்சித்தலைவர் எம்ஜிஆர் சத்துணவு திட்டத்தின்கீழ் இயங்கும் பள்ளி சத்துணவு மையங்களில் உணவுப் பொருட்களை விநியோகம் செய்வதில் ஏற்படும் முறைகேடுகளை களையும் பொருட்டும் கண்காணிப்பு அலுவலர்கள் தமது ஆய்வின் போது உணவுப் பொருட்களை அளக்கவும், இருப்புப் பொருட்களை சரிபார்க்கவும் எடைத்தராசு மற்றும் எடைக் கருவிகள் அவசியம் தேவைப்படுகிறது என்றும் இந்த எடைத்தராசு மற்றும் எடைக்கருவிகள் ஒரே சமயத்தில் 10 கிலோ திண்ம உணவுப் பொருட்களை அளக்கக் கூடியதாக இருக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார். மேலும் ஒரு எடைத்தராசு மற்றும் எடைக் கருவிகள் வாங்குவதற்கான உத்தேச விலை ரூ.2000/– வீதம் 30 மாவட்டங்களில் உள்ள பள்ளி சத்துணவு மையங்கள் மற்றும் சென்னை மாநகராட்சியின்கீழ் இயங்கும் பள்ளி சத்துணவு மையங்கள் ஆகியவற்றில் உள்ள 2500 சத்துணவு மையங்களைத் தெரிவு செய்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.50.00 இலட்சம் பிரித்து வழங்கவும், சென்னை மாநகராட்சி மற்றும் மாவட்டங்களின் தேவைக்கேற்ப இத்தொகையினை பகிர்ந்தளிக்கும் அதிகாரத்தையும் அளிக்குமாறு சமூகநல இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேற்காணும் சமூகநல இயக்குநரின் செயற்குறிப்பை அரசு கவனத்துடன் பரிசீலித்தது. பரிசீலனைக்குப் பின்னர் ஒரு எடைத்தராசு மற்றும் எடைக் கருவிகள் வாங்குவதற்கான உத்தேச விலை ரூ.2000/– வீதம் 30 மாவட்டங்களில் உள்ள பள்ளி சத்துணவு மையங்கள் மற்றும் சென்னை மாநகராட்சியின்கீழ் இயங்கும் பள்ளி சத்துணவு மையங்கள் ஆகியவற்றில் உள்ள 2500 சத்துணவு மையங்களை தெரிவு செய்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.50.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஐம்பது இலட்சம்) மிகாமல் தொடராச் செலவினமாக மேற்கொள்ள சமூகநல இயக்குநருக்கு அனுமதியளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

3. மேலே பத்தி 2ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :-

> 2236 – சத்துணவு 02 சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் II மாநிலத் திட்டம் 102 மதிய உணவு – KN – அரசுப் பள்ளிகளிலும் அரசு மானிய உதவி பெறும் பள்ளிகளிலும் உள்ள 10–14 வயது வரையிலான குழந்தைகளுக்கு புரட்சித்தலைவர் எம்ஜிஆர் சத்துணவுத் திட்டம் 24 பொருள்களும் வழங்கலும் (தா.தொ.கு.எண்.2236 02 102 KN 2408)

4. ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையினை பயன்படுத்தி பள்ளி சத்துணவு மையங்களுக்கு புதிய எடைத்தராசு மற்றும் எடைக் கருவிகள் வழங்க தொடர்புடைய அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் சென்னை மாநகராட்சிக்கும் தேவைப்படும் நிதியினை பிரித்து வழங்கவும் சமூகநல இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் 2008–09ம் ஆண்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களை தேர்வு செய்யவும் ஒப்பளிக்கப்பட்ட தொகையை மாவட்டங்களுக்கு பங்கீடு செய்யவும் புதிய எடைத்தராசு மற்றும் எடைக் கருவிகள் வாங்கி வழங்கப்படுவதை கண்காணிக்கவும் சமூகநல இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையை பயன்படுத்தியது குறித்த பயனீட்டுச் சான்றிதழை அரசுக்கு உடன் அனுப்பி வைக்குமாறு சமூகநல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. மேலும் அரசால் ஒப்பளிப்பு செய்யப்படும் தொகை ரூ.50.00 இலட்சத்திலிருந்து பள்ளி சத்துணவு மையங்களுக்கு உணவுப் பொருட்களை அளப்பதற்கு எடைக்கருவிகள் மற்றும் எடைத்தராசு வாங்கி வழங்கும் நிகழ்வில் தமிழ்நாடு திறந்த வெளி ஒப்பந்தப் புள்ளி சட்டம் 1998 மற்றும் தமிழ்நாடு திறந்த வெளி ஒப்பந்தப் புள்ளி விதிகள் 2000ல் உள்ள விதி முறைகளை பின்பற்ற வேண்டும் என்றும் சமூகநல இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.23312/SW/08 நாள் 17–04–2008 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நா.ச.பழனியப்பன்,
சிறப்பு ஆணையர் மற்றும் அரசு செயலர்

பெறுநர்
சமூகநல இயக்குநர், சென்னை 5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை 3.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்கள், சென்னை 6/9/18/35
மாநில கணக்காயர், ன்னை 9/18/35
தலைமை அரசுத் துறை நிறுவன தணிக்கையர், சென்னை 2.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை 6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை 6.
நகல்
ஊரக வளர்ச்சி இயக்குநர், சென்னை 15.
நிதித் (சந / வரவு செலவு–II) துறை, சென்னை 9.
சமூகநலம் மற்றும் சத்துணவு (சந2) துறை, சென்னை 9.
இகோ/உந

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்